
ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:



திருக்கோட்டியூர் நம்பிகள்

வைபவம்



[illegible] மணிமாடக்கோயில்

ஸ்ரீநாராயணப்பெருமாள்

இயற்றியவர்

[illegible] ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் M.A., B.L., Advocate

(ஸுதர்சனர்)

[illegible] ஆசிரியர் ஸ்ரீவைஷ்ணவஸுதர்சனம்

[illegible] திருச்சிராப்பள்ளி, 620017

[illegible] திருக்கோட்டியூர் நம்பிகள்

[illegible] வெளியீடு

ஸ்ரீ:

திருக்கோட்டியூர்நம்பிகள் வாழித்திருநாமம்

மன்னியசீர் மாறனடி [illegible] வாழியே
வைகாசி ரோகிணிநாள் வந்துதித்தோன் வாழியே
இவ்வுலகத்தில் [illegible] புரைத்தான் வாழியே
எம்பெருமானாருக்கு [illegible] வாழியே
தென்னரங்கர் [illegible]த்திரத் [illegible] வாழியே
திருக்குருகைப்பிரானெனும்பேர் [illegible] வாழியே
முன்னைநாள் பெரும்பூதூர் முனிக்குரைத்தோன் வாழியே
மொழிந்த திருக்கோட்டிநம்பி முதுமலரில் வாழியே.

[illegible] ஸ்தோத்திரத்தைக்கருதிவந்தோன் வாழியே
[illegible]த்தால் முன்னவர்க்குக் கதியளித்தோன் வாழியே
மாசறுமெய்ப்பொருள் [illegible] வாழியே
வையகத்தோர் [illegible] வாழியே
ஏசறவேயுகந்தெதிரை [illegible] வாழியே
எம்பெருமானாரிறைஞ்சும் [illegible] வாழியே
தேசுபுகழ்ச்செல்வன்பொழில்சேர் [illegible] வாழியே
திருக்கோட்டியூர்நம்பி [illegible] வாழியே.

(தொடர்ச்சி பின்புற உள் அட்டையில்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



முன்னுரை

ஸ்ரீ உ. வே. ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், M.A., B.L.,
[ஸுதர்சனர்]. ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்
புது நிர். 5, புத்தூர் அக்ரஹாரம், புத்தூர், திருச்சி - 620 017.

விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ தரிசனத்தை நாடெங்கும் பரப்பிய ஸ்ரீராமாநுஜாசார்யருக்கு ஆசார்யர்கள் ஐவர். அவர்களாவார்: (1) பெரியநம்பி, (2) திருக்கோட்டியூர் நம்பி, (3) திருமாலையாண்டான், (4) பெரிய திருமலை நம்பி (5) திருவரங்கப்பெருமாள் அரையர். இவர்களில் திருக்கோட்டியூர் நம்பியே ரஹஸ்யார்த்தங்களை உபதேசித்து ஸ்ரீ ராமாநுஜரை எம்பெருமானாராக உருவாக்கியவர். அவர் அவதரித்தது திருக்கோட்டியூரில் ஒரு ஸர்வஜித்-ஹு ரோகிணியில். அவருடைய அவதார உத்ஸவம் திருக்கோட்டியூர் ஸந்நிதியில் ஆண்டுதோறும் பத்து நாட்களுக்கு மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பெற்று வருகிறது.

இது தவிர, பதினொரு கருடஸேவை உத்ஸவத்தின்போது மங்களாசாஸனம் நடைபெறுவதால் திருநாங்கூர் திவ்ய தேசங்களில் முக்கியமானதான மணிமாடக்கோயில் எனப்படும் நாராயணப்பெருமாள் ஸந்நிதியில் திருக்கோட்டியூர் நம்பி மூலவர், உத்ஸவர் ஆகிய இரண்டு திருமேனிகளுடன் எழுந்தருளியிருக்கிறார். திருக்கோட்டியூர் நம்பி வம்சத்தைச் சேர்ந்தவர்கள் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் திருநாங்கூருக்குக் குடிபெயர்ந்து நாராயணப் பெருமாள் ஸந்நிதியில் நம்பி விக்ரஹத்தை ஏறியருளப்பண்ணியிருப்பதாகத் தெரிகிறது. இந்த ஸந்நிதியிலும் திருக்கோட்டியூர் நம்பிக்கு ஆண்டுதோறும் வைகாசி ரோகிணியோடு நிறைவுபெறும் ஐந்து நாட்களுக்கு சிறப்பாக உத்ஸவம் நடைபெறுகிறது. இந்த நாராயணப் பெருமாள் ஸந்நிதியில் நம்பி அர்ச்சா

ரூபமாக தினமும் பெருமாளை ஸேவித்துக்கொண்டு எழுந்தருளி யிருக்கிறார். திருநக்ஷத்ரமான வைகாசி ரோகிணியன்று பெருமாள் கருடஸேவையிலும், நம்பி தோளுக்கினியானில் அவரை ஸேவித்துக்கொண்டும் திருநாங்கூரில் வீதிவலம் வருகிறார்கள். இந்த ஸந்நிதியில் திருக்கோட்டியூர் நம்பி வம்சத்தவர்களே முதல் தீர்த்தக்காரர்களாக இருந்து வருகிறார்கள். பெருமாள் புறப்பாடுகளில் நியமேன திருக்கோட்டியூர் நம்பிகளுக்கு அருளப்பாடு ஸாதிக்கப்படுகிறது.

இந்த வருடம் உத்ஸவத்தில் **திருக்கோட்டியூர் நம்பி வைபவத்தை,** திருநாங்கூர் திருக்கோட்டியூர் நம்பி வம்சத்தார் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் வெளியிட விரும்பி அடியேனை திருக்கோட்டியூர் நம்பி வைபவத்தை எழுதி அச்சிட்டுத் தரும்படி கேட்டுக்கொண்டனர். அதன்படி ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம், வார்த்தாமாலை, சரமோபாய நிர்ணயம், பெரிய திருமுடியடைவு, திவ்யப்ரபந்த வ்யாக்யானங்கள் ஆகிய பூர்வாசார்ய க்ரந்தங்களை ஆதாரமாகக் கொண்டு திருக்கோட்டியூர் நம்பி வைபவம் அடியேனால் எழுதி அச்சிடப்பட்டது. விக்ரம-வைகாசி ரோகிணி [2—6—2000] அன்று திருநாங்கூர் மணிமாடக் கோயிலில் நம்பி திருநக்ஷத்ரத்தன்று இந்நூல் வெளியிடப்படுகிறது.

நம்பி வம்சத்தவர்கள் அனைவரும் இதைப் படித்து நம்பி திருவுள்ளத்திற்கு உகப்பாக நடந்துகொள்ளவேண்டும் என்றும், மணிமாடக்கோயிலில் திருக்கோட்டியூர் நம்பி கைங்கர்யத்தில் சிறப்பாக ஈடுபடவேண்டும் என்றும் ப்ரார்த்திக்கிறேன்.

திருச்சி. தாஸன்,

ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்

2—6—2000 [ஸுதர்சனர்]

இந்நூல் கீழ்க்கண்ட விலாசத்தில் ரூ. 6/- விலையில் [தபாற்கூலி தனி] கிடைக்கும்.

ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்
5, புத்தூர் அக்ரஹாரம், புத்தூர்,
திருச்சி - 620 017.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

திருக்கோட்டியூர் நம்பி வைபவம்

எழுதியவர் :
ஸ்ரீ உ. வே ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், M.A.,B.L.,
[ஸுதர்சனர்], ஆசிரியர் : ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்
புது நிர். 5, புத்தூர் அக்ரஹாரம், புத்தூர், திருச்சி-620 017.

ஆழ்வார்கள் பரவச்செய்த பரமவைதிக மதமான ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தைப் பிற்காலத்தில் நாதமுனிகள் முதலான ஆசார்யர்கள், எதிர்வாதங்களுக்குப் பதிலிறுத்து மறுத்து நன்கு நிலைநாட்டினார்கள். இந்த ஆழ்வார்களில் நம்மாழ்வார் தலைமை பெற்றவர். அவர் ரிக் வேத ஸாரமாகத் திருவிருத்தம் என்னும் திவ்ய ப்ரபந்தத்தையும், யஜுர் வேத ஸாரமாகத் திருவாசிரியம் என்னும் திவ்ய ப்ரபந்தத்தையும், ஸாம வேத ஸாரமாகத் திருவாய்மொழி என்னும் திவ்யப்ரபந்தத்தையும், அதர்வண வேத ஸாரமாகப் பெரிய திருவந்தாதி என்னும் திவ்யப்ரபந்தத்தையும் அருளிச்செய்தார். ஆசார்யர்களில் முதல்வரான நாதமுனிகள் அஷ்டாங்கயோகம் கைவந்தவராகையாலே, தமக்குப் பல நூற்றுண்டுகள் முற்பட்டவரான நம்மாழ்வாரை யோகநிலையிலே மனத்தாலே ஸாக்ஷாத்கரித்து (நேரே கண்டு) அவரிடமிருந்து திவ்ய ப்ரபந்தங்களையும், அவற்றின் அர்த்தங்களையும் ரஹஸ்யத்ரயத்தின் அர்த்தங்களையும் உபதேசிக்கப் பெற்றார். அவர் திருவாய்மொழியைக் கேட்டு வரும்போது,

' பொலிக பொலிக பொலிக போயிற்றுவல்லுயிர்ச் சாபம்
நலியும் நரகமும்நைந்த நமனுக்கு இங்கு யாதொன்றுமில்லை
கலியும் கெடும் கண்டு கொண்மின் கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்
மலியப்புகுந்து இசைபாடி ஆடியுழிதரக் கண்டோம்''

[திருவாய்மொழி 5-2-1]

என்னும் பாட்டில், ''கலியும் கெடும் கண்டுகொண்மின்'' என்னும் தொடராலே பிற்காலத்தில் கலிகாலமே கெட்டுப்போம்படியான தொரு நிகழ்ச்சி நடக்கப்போவதை ஆழ்வார் உணர்த்தியுள்ளார் என்று உணர்ந்த நாதமுனிகள் அதுபற்றி விளக்கம் கேட்ட

வுடன், நம்மாழ்வார் ஸ்ரீராமாநுஜருடைய அவதார காலத்தில் கலியும் கெடும்படியான அளவுக்கு இந்தத் தரிசனம் வளரப் போகிறது என்று அருளிச்செய்து, நாதமுனிகளின் வேண்டு கோளின்படி பவிஷ்யதாசார்யரான (பிற்காலத்தில் அவதரிக்கப் போகிற ஆசார்யரான) ராமாநுஜருடைய விக்ரஹத்தை அமைத்து நாதமுனிகளுக்கு அருளியதாகவும் பெரியவாச்சான் பிள்ளையின் குமாரரான நாயனாராச்சான் பிள்ளை அருளிய சரமோபாய நிர்ண யத்தில் காணப்படுகிறது. அந்த விக்ரஹம் நாதமுனிகளிடமிருந்து அவருடைய சீடரான உய்யக்கொண்டாரிடமும், அவரிடமிருந்து அவருடைய சீடரான மணக்கால் நம்பியிடமும், அவரிடமிருந்து அவரது சீடரும் நாதமுனிகளின் பேரருமான ஆளவந்தாரிடமும் அவரிடமிருந்து அவருடைய சீடர்களில் தலைவரான திருக்கோட்டி யூர் நம்பியிடமும், அவரிடமிருந்து அவரது குமாரியான தேவகிப் பிராட்டியாரிடமும் வந்ததாக அந்தச் சரமோபாய நிர்ணயம் கூறுகிறது. இன்றும் திருக்கோட்டியூரில் திருக்கோட்டியூர் நம்பி ஸந்நிதியில் இந்த பவிஷ்யதாசார்ய விக்ரஹம் காணப்படுகிறது.

பெரியாழ்வாரும் செல்வ நம்பியும்

ஆழ்வார்கள் காலத்தில் தமிழ்நாட்டில் அந்தணர்களாயிருந்த ஆழ்வார்கள் மூவரும் பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ பிராம்மணர் களாகவே அமைந்துள்ளனர். வடதேசத்திலிருந்து சோழ தேசத் திற்கு முதன் முதலில் வந்தவர்களாகையாலே 'சோழியர்கள்' என்னும் சிறப்புப் பெயரால் இவர்கள் அழைக்கப்பட்டனர். ஆழ் வார்களில் பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ பிராம்மண குலத்தைச் சேர்ந்த விஷ்ணுசித்தர் என்னும் பெரியாழ்வார் காலத்தில் பாண்டிய நாட்டை வல்லபதேவன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவனுக்குப் பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ பிராம்மணோத்தமரான செல்வ நம்பி என்பவர் மந்திரியாயிருந்தார். இவரே வல்லபதேவன் மூலம் பெரியாழ்வாரைக் கொண்டு பரதத்வ நிர்ணயம் செய்வித்த வர். பெரியாழ்வார் "அல்வழக்கொன்றும் இல்லா அணிகோட்டி யர் கோன் அபிமான துங்கன் செல்வன்" [திருப்பல்லாண்டு 11] என்று திருப்பல்லாண்டிலும்,

"நளிர்ந்த சீலன் நயாசலன் அபிமானதுங்கனை—நாள்தொறும்
தெளிந்த செல்வனைச் சேவகங்கொண்ட செங்கண்மால்
திருக்கோட்டியூர்" [பெரியாழ் திரு 4-4-8]

என்று பெரியாழ்வார் திருமொழியிலும் இந்தச் செல்வ நம்பியை மிகச்சிறப்பாகப் பாராட்டியிருப்பதைக் காணலாம். இந்தச்செல்வ நம்பியின் வம்சத்தில் அவதரித்தவர் திருக்கோட்டியூர் நம்பி. இவருடைய வாழி திருநாமத்தில், "செல்வ நம்பிகுலம் தழைக்கச் செகத் துதித்தான் வாழியே" என்று இருப்பதிலிருந்து இது உறுதியாகிறது.

ஆளவந்தாரும் திருக்கோட்டியூர் நம்பியும்

நாதமுனிகளின் பேரரான யாமுனாசார்யர் காலத்திலேயே ஸ்ரீ ராமானுஜருடைய அவதாரம் நிகழ்ந்தது. ஸ்ரீராமானுஜர் அத்வைதி யான யாதவப்ரகாசரிடம் உபநிஷத்துக்களுக்கு அர்த்தம் கேட்டு வந்தபோது காஞ்சீபுரம் தேவப்பெருமாள் ஸந்நிதியில் ஆளவந்தார் அவரைக் கடாக்ஷித்து "இவரே நம்மாழ்வார் 'பொலிக பொலிக'-வில் திருவுள்ளம் கொண்ட ப₄விஷ்யதா₃சார்யர்" என்று நிர்ணயித்தார். ஆனால் நேரில் அவருக்கு உபதேசிக்கும் வாய்ப்பு ஆளவந்தாருக்குக் கிட்டவில்லை. அதனால் நம்மாழ்வார் நாதமுனிகள் உய்யக்கொண்டார் மணக்கால் நம்பி என்னும் ஆசார்ய பரம்பரையின் மூலம் தாம் பெற்ற அர்த்தங்களை ஐந்து சிஷ்யர்களிடம் சேமித்து வைத்து அவற்றை ஸ்ரீராமானுஜருக்கு உபதேசிக்கும்படி கட்டளையிட்டார். அவர்களாவார் :— 1. பெரிய நம்பி 2. திருக்கோட்டியூர் நம்பி 3. திருமாலையாண்டான் 4. பெரிய திருமலை நம்பி 5. திருவரங்கப் பெருமாளரையர். இப்படிப் பல சிஷ்யர்களிடம் ஆளவந்தார் அர்த்தங்களைச் சேமித்து வைத்திருந்த போதிலும், ஸ்ரீராமானுஜரே ப₄விஷ்யதா₃சார்யர் என்று நிர்ணயித்து அவருக்கு ரஹஸ்யார்த்தங்களை உபதேசித்து அவர் பெயரில் தர்சனம் விளங்கும்படி செய்யவேண்டிய பொறுப்பைத் திருக்கோட்டியூர் நம்பியிடமே ஆளவந்தார் ஒப்படைத்திருந்தார். மணக்கால் நம்பியிடமிருந்து தாம்பெற்ற ப₄விஷ்யதா₃சார்ய விக்ரஹத்தையும் அவர் வசமே ஒப்படைத்து, "இவரை மஹாசார்யராக உருவாக்க வேண்டிய பொறுப்பு உம்முடையது" என்று நியமித்திருந்தார்.

ஐந்து ஆசார்யர்களும் ஸ்ரீராமானுஜரும்

பெரிய நம்பி ஸ்ரீராமானுஜருக்கு மதுராந்தகத்தில் பஞ்ச ஸம்ஸ்காரங்களை ஸாதித்தார். திவ்ய ப்ரபந்தங்களையும் உபதேசித்தார். திருக்கோட்டியூர் நம்பி திருமந்த்ரார்த்தமும் சரமஶ்லோகார்த்தமும் ஸாதித்தார். திருமாலையாண்டான் திருக்கோட்டியூர் நம்பி

யின் நியமனத்தால் ஸ்ரீராமாநுஜருக்குத் திருவாய்மொழியின் அர்த்தத்தை உபதேசித்தார். பெரிய திருமலை நம்பி ஸ்ரீராமாநுஜருக்கு ஸ்ரீராமாயணத்தின் பொருளை உபதேசித்தார். திருவரங்கப்பெருமாளரையர் ஸ்ரீராமாநுஜருக்கு "ஆசார்யனே உபாயம்" என்னும் சரமோபாயத்தை உபதேசித்தார். அருளிச்செயல் சந்தையும் நல்வார்த்தைகளையும் உபதேசித்தார். இந்த ஐவரில் ஸ்ரீராமாநுஜரை உருவாக்குவதில் பெரும்பங்கு வகித்த திருக்கோட்டியூர் நம்பியின் பெருமைகளை அடுத்தபடி விரிவாக அனுபவிப்போம்.

திருக்கோட்டியூர் நம்பியும் எம்பெருமானாரும்

ஆளவந்தார் அவதரித்துப் பதினொரு வருடங்கள் கழிந்தபின் [கி.பி. 987] ஸர்வஜித் வருஷத்திலே வைகாசி ரோகிணியில் காஶ்யப கோ₃த்ரத்தில் ருக்₃வேதை₃யில் பெரியாழ்வாருக்குப் பரம ஆப்தரான செல்வ நம்பியின் வம்ஶத்திலே ஸ்ரீபுண்டரீகர் என்னும் நித்ய ஸூரியின் அம்சமாய், பூர்வசிகா₂ ஸ்ரீவைஷ்ணவ ப்₃ராஹ்மண குலத்திலே குருகேசர் (திருக்குருகைப்பிரான்) என்னும் திருநாமமுடையவராய் அவதரித்தவர் திருக்கோட்டியூர் நம்பி. நாதமுனிகளிடமிருந்து உய்யக்கொண்டார் மணக்கால் நம்பிகளின் மூலம் கிடைத்த ப₄விஷ்யதா₃சார்ய விக்₃ரஹத்தை ஆளவந்தார் தம் சரம த₃சையிலே இவரிடம் ப்ரஸாதித்து, அது வந்த வழியையும் அருளிச்செய்து, ரஹஸ்யார்த்த₂ங்கள் அனைத்தையும் ஸ்ரீராமாநுஜருக்கு உபதேசிக்கும்படியும் நம் த₃ரிசனத்தை அவர் திருநாமத்தாலே விளங்கவைக்கும்படியும் நியமித்துச் சென்றார்.

ஆளவந்தார் அவரது சிஷ்யர்கள் காலம் வரையில், "ஓராண் வழியாய் உபதேசித்தார் முன்னோர்" என்று மாமுனிகள் உபதேச ரத்தினமாலையில் அருளிச்செய்தபடியே ஒவ்வொரு ஆசார்யரும் சிஷ்யர்களின் தகுதியை ஆராய்ந்து, அவர்கள் கைங்கர்யங்கள் முதலானவை செய்து மிகவும் பிரார்த்தித்த பின்னரே அவர்களுக்கு அர்த்தங்களை உபதேசம் செய்தனர். இந்த ஆசார்யர்கள் அநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்யர்கள் [சுச்ரூஷை கைங்கர்யம் முதலானவற்றைச் செய்வதால் உகக்கும் ஆசார்யர்கள்] என்று அழைக்கப்படுவர். இந்த முறையில் உபதேசம் தொடர்ந்தால் தரிசனம் வளராது என்று உணர்ந்த ஆளவந்தார் ஸ்ரீராமாநுஜரை 'க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யராக [நிர்ஹேதுக கருணையால உகந்து உபதேசிக்கும் ஆசார்யராக] உருவாக்கவேண்டும் என்று திருக்கோட்டியூர் நம்பியிடம் நியமித்திருந்தார். அப்படி உருவாக்குவதற்குப் பல வகைப்பட்ட முயற்சிகளைத் திருக்கோட்டியூர் நம்பி மேற்கொண்டார்.

தம்மிடம் பஞ்சஸம்ஸ்காரம் பெற்று த்வயத்தின் அர்த்தத்தைக் கேட்டிருந்த ஸ்ரீராமாநுஜரை, திருமந்த்ரார்த்தம், சரம ஸ்லோகார்த்தம் ஆகியவற்றைக் கேட்பதற்கு, திருக்கோட்டியூர் நம்பியை அணுகும்படி பெரிய நம்பி நியமித்து விட்டார். அதன்படியே ஸ்ரீ ராமாநுஜரும் திருக்கோட்டியூருக்கு எழுந்தருளி அவ்வூரிலுள்ளவர்களை "நம்பி திருமாளிகை எங்கே?" என்று கேட்டார். அவர்கள், "அதோ தெரிகிற வீடுதான் நம்பியுடையது" என்று கூறினார்கள். உடையவர் அவ்விடத்திலிருந்து அந்தத் திருமாளிகை வரையிலும் தண்டனிட்டுக் கொண்டே எழுந்தருளித் திருமாளிகையை அடைந்தார். அதுவரையில் அவ்வூரிலுள்ளாருக்கு நம்பியின் பெருமை விளங்காமலே இருந்தது என்றும், இந்நிகழ்ச்சியைக் கண்டபிறகே அவ்வூரிலுள்ளவர்கள் நம்பியின் ப்ரபாவத்தை அறிந்தனர் என்றும் ஆறுயிரப்படி குருபரம்பராப்ரபாவம் கூறுகிறது. ராமாநுஜரும் நம்பியை தண்டனிட்டு, 'அடியேனுக்கு ரஹஸ்யார்த்தங்களை உபதேசிக்கவேணும்" என்று பிரார்த்தித்தார். ஆனால் நம்பி இவரை க்ருபா மாத்ர ப்ரஸந்நாசார்யராக உருவாக்கவேண்டும் என்று திருவுள்ளம்பற்றி இவருக்கு எளிதில் உபதேசம் செய்ய இணங்கவில்லை. ஆகையால் உடையவர் ஸ்ரீரங்கம் திரும்பினார். அதற்குப்பின் ஸ்ரீரங்கத்திற்கு வந்த நம்பியிடம் ஸ்ரீரங்கநாதனே அர்ச்சகர் மூலமாக ஸ்ரீராமாநுஜருக்கு ரஹஸ்யார்த்தங்களை உபதேசிக்கும்படி நியமித்தார். அதற்குப்பின் நம்பி நியமனத்தாலே திருக்கோட்டியூர் சென்ற ராமாநுஜருக்கு உடனே உபதேசிக்கத் திருவுள்ளம் பற்றாமல், அவரை பதினெட்டு முறை ஊர் சென்று வரும்படி அலைக்கழித்தார். இப்படி நம்பி அலைக்கழித்ததைப் பற்றி நம்பி சிஷ்யர் ஒருவரிடம் ஸ்ரீராமாநுஜர் மிகவும் வருத்தத்துடன் விண்ணப்பித்தார். அதை அவரும் நம்பியிடம் சொல்ல, ஸ்ரீராமாநுஜருக்கு ரஹஸ்யார்த்தம் கேட்கவேணும் என்னும் விருப்பம் மிகவும் வளர்ந்திருப்பதைக் கண்டு உகந்து, அந்தச் சிஷ்யர் மூலமே ஸ்ரீராமாநுஜரை தண்டத்தோடும் பவித்ரத்தோடும் ஒருவராய் வரும்படி நியமித்தார் நம்பி. உடனே கூரத்தாழ்வானையும் முதலியாண்டானையும் கூட்டிக்கொண்டு திருக்கோட்டியூர் சென்று நம்பி திருவடிகளில் தண்டன் ஸமர்ப்பித்து நின்றார் ஸ்ரீராமாநுஜர் "உம் ஒருவரைத்தானே வரச்சொன்னோம். இருவரைக் கூட்டி வந்திருக்கிறீரே?" என்று நம்பி கேட்க "தண்டத்தோடும் பவித்ரத்தோடும் வரச்சொன்னபடியாலே தண்டமும் பவித்ரமும் போன்ற இவர்களைக் கூட்டி வந்தேன்" என்றார் ராமாநுஜர். "இதில் யார் தண்டம் யார் பவித்ரம்" என்று நம்பி கேட்க, உடையவரும் முதலியாண்டானைக் காட்டி இவர் த்ரிதண்டம்

போன்றவர் என்றும் 'கூரத்தாழ்வானைக் காட்டி இவர் *பவித்ரம் போன்றவர் என்றும் கூறினார். நம்பியும் 'அப்படியானால் இவரைத் தவிர வேறு எவருக்கும் சொல்லவேண்டாம்' என்று தம் திருவடிகளைத் தொட்டு ஆணையிடும்படி செய்து, திருமந்த்ரம் எனப்படும் திருவஷ்டாக்ஷரத்தின் பொருளை அவருக்கு உபதேசித்தார்.

ஸ்ரீராமாநுஜரும் மிக உகந்து, மறுநாளே அவ்வூரிலிருந்த தெற்காழ்வான் என்னும் நரசிம்மர் ஸந்நிதியில் இவ்வர்த்தத்தைக் கேட்க விரும்பிய பல ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அவ்வர்த்தத்தை உபதேசித்தருளினார்.

இதைக் கேள்விப்பட்ட நம்பி உடையவரை அழைத்து "இந்தப் பரம ரஹஸ்யார்த்தத்தை வேறொருவரிடமும் சொல்லவேண்டாம் என்று நான் ஆணையிட்டிருக்கப் பலருக்குச் சொல்லிவிட்டீரே? அதன் பலன் என்ன தெரியுமா?" என்று கேட்டார். "ஆசார்ய நியமனத்தை மீறிய எனக்கு நரகமே பலன்" என்றார் ராமாநுஜர். "இது தெரிந்திருந்தும் ஏன் உபதேசித்தீர்?" என்று கேட்டார் நம்பி. அதற்கு ஸ்ரீ ராமாநுஜர் 'அடியேன் ஒருவன் தானே நரகம் போகப் போகிறேன். தேவரீர் திருவடிகளை முன்னிட்டுக் கொண்டு பலருக்கு உபதேசித்தபடியாலே கேட்டவர்கள் பலரும் உய்ந்து போவார்களே என்றே சொன்னேன்' என்று கூறினார். அதைக் கேட்டவுடன். "இவரே நம்மாழ்வாரால் 'பொலிக பொலிக'வில் குறிப்பிடப்பட்டு ஆளவந்தார் வரையில் உள்ள ஆசார்யர்களால் எதிர்பார்க்கப்பெற்ற பவிஷ்யதாசார்யர்" என்று நிர்ணயித்து, சுயநலம் கருதாமல் பிறர் நலமே கருதிய இவரது பெருங்கருணைக்கு உகந்து, 'எம்பெருமானாரே வாரும்' என்று அவரை எடுத்து அணைத்துக்கொண்டு "இதுவரை இந்த தரிசனம் பரம வைதிக ஸித்தாந்தம் என்றே பெயர் பெற்றிருந்தது. இன்று முதல் இது 'எம்பெருமானார் தரிசனம்' என்றே வழங்கப்படும்" என்று அவ்வூரிலுள்ளார் அனைவர்க்கும் கூறினார் திருக்கோட்டியூர் நம்பி. இந்நிகழ்ச்சியிலிருந்து திருக்கோட்டியூர் நம்பி பெரிய தீர்க்கதரிசி என்பதும். தனக்குக் கெட்டபெயர் வந்தாலும் அதைப் பொறுத்துக்கொண்டு உலகிற்கு நன்மை விளையத் தேடுபவர் என்பதும் விளங்குகிறது.

---

* பவித்ரம் என்பது அநுஷ்டானத்தின்போது ஸந்யாஸிகளுக்கு உதவும் ஜலபவித்ரம் என்னும் வஸ்த்ரம் என்று சிலரும், யஜ்ஞோபவீதம் என்று சிலரும் பொருள் கொள்கிறார்கள்.

அதற்குப் பிறகு நம்பி மிகவுகந்து, "உமக்குச் சரமஸ்லோகத்தின் அர்த்தத்தையும் உபதேசிக்க எண்ணுகிறேன். இப்பொழுது திருவரங்கம் சென்று நீர் ஒருவரே தனியாக வாரும்" என்று அருளிச்செய்தார். அப்படியே எம்பெருமானாரும் மறுபடியும் ஒரு முறை திருக்கோஷ்டியூருக்கு வந்து தண்டன் ஸமர்ப்பித்து நிற்க, நம்பி அவர் திருக்கையைப் பிடித்துக்கொண்டு மேல் தளத்திலே ஏறி, தனியாகக் கதவைச் சாத்திக்கொண்டு ஒருவருக்கும் சொல்லாதபடி ஆணையிட்டு, தம்முடைய நிர்ஹேதுக கருணையாலே சரம ஸ்லோகத்தின் அர்த்தத்தையும் உபதேசித்தருளினார். அந்த அர்த்தத்தை எம்பெருமானிடம் ஈடுபாடில்லாதவர்கள் செவிப் படாதபடி ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும் என்றும் நியமித்தார். அதற்கு எம்பெருமானார், 'இதைக் கண்டவர்களுக்கு வெளியிட மாட்டேன். ஆனால் கூரத்தாழ்வான் ஒருவருக்காவது சொல்லாதிருக்க முடியாதே" என்று நம்பியைக் கேட்டார். அதற்கு நம்பி அவருக்கு மட்டும் ஒரு வருடம் சுச்ருஷை கொண்டு பரீக்ஷை செய்தபிறகு சொல்லும் என்று நியமித்தார்.

ஸ்ரீரங்கத்திற்கு எம்பெருமானார் திரும்பியதும் ஆழ்வான் இதைக் கேள்விப்பட்டு ஒருவருடம் காத்திருக்க இயலாமையாலே, 'ஒருவருடம் ஆசார்யனுக்கு சுச்ரூஷைசெய்வதற்கு ஸமானம் அவர் திருமாளிகை வாசலிலே ஒரு மாதம் உபவாசம் இருப்பது' என்னும் சாஸ்த்ர விதியின்படி ஒரு மாதம் உபவாஸம் இருந்து எம்பெருமானாரிடமிருந்து சரம ஸ்லோகார்த்தத்தைப் பெற்றார்.

அதற்குப்பின் முதலியாண்டான் எம்பெருமானார் திருவடிகளில் தண்டன் ஸமர்ப்பித்து "அடியேனுக்கும் சரம ஸ்லோகார்த்தத்தை உபதேசித்தருளவேணும்" என்று பிரார்த்தித்தார். அதற்கு எம்பெருமானார் "நான் ஆழ்வான் ஒருவருக்கு மட்டுமே அனுமதி பெற்றிருக்கிறேன். எனவே நீர் திருக்கோட்டியூர் சென்று நம்பியிடமே கேட்டுக்கொள்ளும்" என்றார். அதன்படி முதலியாண்டானும் திருக்கோட்டியூர் வந்து நம்பியிடம் தண்டன் ஸமர்ப்பித்து ஆறுமாசம் அவர் திருமாளிகையில் காத்திருந்தார். விடைபெற்றுக் கொள்ளும்போது 'சரம ஸ்லோகார்த்தத்தை அடியேனுக்கும் அருளவேணும்' என்று கேட்டார் முதலியாண்டான். அதற்கு நம்பி "கல்வி தனம் குடிப்பிறப்பு ஆகியவற்றால் உண்டாகும் மூன்று வகைப்பட்ட மதங்களாகிற முக்குறும்பு நீங்கினால் எம்பெருமானார் தாமே உமக்கு அதை அருளுவார்." என்று ஸாதித்து, தன் திருவடித் தாமரைகளை முதலியாண்டான் தலைமீது வைத்து அவருக்கு விடை கொடுத்தார். அதன்படியே ஸ்ரீரங்கத்திற்கு வந்த முதலி

யாண்டான் அடக்கமே உருவானவராக எம்பெருமானார் திருமுன்பே நின்று அவரைப் பிரார்த்தித்ததும், அவருக்கு சரமஸ்லோகார்த்தத்தை உபதேசித்தருளினார் எம்பெருமானார்.

புறமதத்தவர்களும் பார்க்கக்கூடிய கீதா பாஷ்யத்தில் எம்பெருமானார் சரம ஸ்லோகத்தின் முக்யார்த்தத்தை அருளிச் செய்யாமல் பக்தி யோகத்திற்கு அங்கம் என்னும் அமுக்யார்த்தத்தையே காட்டியிருப்பதிலிருந்து, 'கண்டவர்களுக்கு இவ்வர்த்தத்தைச் சொல்லக் கூடாது' என்னும் நம்பியின் நியமனத்தை எம்பெருமானார் உறுதியாகப் பின்பற்றி நின்றார் என்று விளங்குகிறது.

இப்படிச் சரம ஸ்லோகத்தின் அர்த்தத்தை அதிகாரிகளின் தகுதியைக் கண்டறியாமல் உபதேசிக்கக் கூடாது என்று நம்பி நியமித்ததற்கும், எம்பெருமானாரும் திருமந்த்ரத்தின் பொருளை ஆசையுடையோர்க்கெல்லாம் சொன்னதுபோலே இதைச் சொல்லாதிருந்ததற்கும் காரணம் என்ன என்று ஆராயவேண்டும். "மோக்ஷத்திற்காக கீதை பதினெட்டு அத்தியாயங்களிலும் விதிக்கப்பட்ட சாதனங்கள் அனைத்தையும் வாஸனையோடே விட்டு என்னையே உபாயமாகப் பற்றவேண்டும்" என்று விதிப்பது சரமஸ்லோகம். மோக்ஷத்தைக்கூடத் தன் ஆனந்தத்திற்காக விரும்பாதவர்களே இந்த அர்த்தத்தைக் கேட்பதற்குத் தகுதியுடையவர்கள் என்பது நம்பி எம்பெருமானார் முதலியவர்களுடைய திருவுள்ளமாகும். சுயநலத்தை அடியோடு துடைக்கும் பக்குவமில்லாதவர்களுக்கு இதை உபதேசித்தால் அவர்கள் மற்ற உபாயங்களை விடுவதில் காட்டும் ஆர்வத்தை எம்பெருமான் ஒருவனையே உபாயமாக உறுதியாக எண்ணுவதில் காட்டமாட்டார்கள். ஆகையால் அவர்களுக்கு இந்தச் சரம ஸ்லோகத்தின் அர்த்தம் அனுஷ்டிக்க இயலாததாய் இருக்கும். அதனாலேயே நம் பூர்வாசார்யர்கள் சரம ஸ்லோகத்தின அர்த்தத்தை மட்டும் அதிகாரிகளின் தகுதியை ஆராய்ந்த பின்பே உபதேசித்து வந்தார்கள்.

இவ்விடத்தில் நாயனாராச்சான்பிள்ளையருளிய சரமோபாய நிர்ணயத்திலுள்ள நம்பி எம்பெருமானார் பற்றிய கீழ்க்கண்ட ஐதிஹ்யம் அனுஸந்திக்கத்தக்கது:- திருக்கோட்டியூரிலே உடையவர் எழுந்தருளி நம்பி பக்கலிலே சரம ஸ்லோகம் கேட்கிறபோது தஞ்சமான அர்த்த விசேஷங்களையெல்லாம் அருளிச் செய்து, "தேவரீரைப் பலகாலும் துவளப் பண்ணினத்தைத் திருவுள்ளத்திலே கொள்ளாதே கிடீர். அர்த்தத்தின் சீர்மையை வெளியிடவேண்டிச் செய்தோமித்தனை; தேவரீர் லோக ஸம்

ஏகார்ணாத்தமாகத் திருவவதரித்தருளிற்று. நாதமுனிகளுக்குத் ப்ரதமான விஷயம் தேவரீர். இப்படிப்பட்ட மஹாநுபாவ ேனோடே ஸம்பந்தமுண்டாகப் பெற்றோம் என்று மார்பிலே கைபோகட்டு உறங்கலாம்படிக்கு உடலாயிருக்கிறது. எங்கள் ஆசார்யரான ஆளவந்தார் ஸ்ரீபாதத்திலே ஆஸ்ரயித்த முதலி களிலே இத்தர்சநத்தை நிர்வஹிக்க ஆளுண்டாயிருக்கவும், தேவரீரே தர்சந ப்ரவர்த்தகராக வேணுமென்று பேரருளா ளன் ஸந்நிதியிலே ப்ரபத்தி பண்ணியருளித் திருநாட்டுக்கு எழுந்தருளுகிறபோது 'இந்த மஹாநுபாவனோடே நாலு நாளா கிலும் கலந்து பரிமாறப் பெற்றோமில்லையே' என்று இழ வோடே எழுந்தருளினர். ஆகையாலே இத்தர்சநம் எம்பெரு மானார் தர்சநமென்று தேவரீர் திருநாமத்தினாலே நாள் தோறும் கொழுந்துவிட்டு விளங்கப்போகிறது" என்று அருளிச் செய்தார் திருக்கோட்டியூர் நம்பி. [சரமோபாய நிர்ணயம்]

இதுவரையில் எம்பெருமானரை எம்பெருமானராக உருவாக்கி யவர் திருக்கோட்டியூர் நம்பியே என்பதும், அவரைக் கொண்டு சுயநலம் சிறிதுமற்ற ஓர் ஆசார்ய பரம்பரை அமைவதற்கு அடித்தளம் அமைத்தவர் திருக்கோட்டியூர் நம்பியே என்பதும் நிரூபிக்கப்பட்டது. இனி எம்பெருமானரிடம் மிகவும் பரிவு கொண்டு அவரை அவ்வப்போது நேரும் ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றியவரும் திருக்கோட்டியூர் நம்பியே என்பது நிரூபிக் கப்படுகிறது.

உடையவர் தினந்தோறும் ஸ்ரீவைஷ்ணவர்களின் திருமாளிகை களில் உஞ்சவ்ருத்தி என்றும் மாதுகரம் என்றும் சொல்லப் படும் பிக்ஷையைப் பெற்றே தேஹயாத்திரையை நடத்தி வந் தார். ஸ்ரீரங்கத்தில் "தென்னரங்கன் செல்வம் முற்றும் திருத்தி வைக்கும்" பணியையும் மேற்கொண்டிருந்தபடியாலே, கோயில் கைங்கர்ய பரர்கள் தவறு செய்யாதபடி அவர்களைக் கண் காணித்து வந்தார். அவர்களில் பாதிக்கப்பட்ட ஒருவர் இவர் மேல் கோபம்கொண்டு இவர் உஞ்ச வ்ருத்திக்கு எழுந்தரு ளும்போது தன் மனைவியைக்கொண்டு விஷம் கலந்த உணவை அளிக்கும்படி நிர்ப்பந்தித்தார். மனத்தளவில் அதற்கு உடன் படாத அப்பெண்பிள்ளை அந்த அன்னத்தை இடும்போது மறித்து ஸமர்ப்பித்து தண்டனிட்டுச் சென்றாள். எம்பெருமா னரும் அவளது குறிப்பை அறிந்து, அந்த விஷங்கலந்த அன்னத்தை, திருக்காவேரியிலே சேர்த்துவிட்டு உண்ணாமலே இருந்தார். இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட திருக்கோட்டி

யூர் நம்பி பதறிக்கொண்டு பல்லக்கில் ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளினர். அவரது வருகையைக் கேள்வியுற்ற எம்பெருமானார் தம் சிஷ்யர்களோடு கூட அவரை எதிர்கொண்டழைக்க நடந்து சென்றார். இருவரும் நடுப்பகலில் கோடை வெய்யில் அடிக்கும் போது நடுக்காவேரி மணலில் சந்தித்தனர். நம்பியைக் கண்ட வுடன் எம்பெருமானார் அந்தக் கொதிக்கும் மணலில் தண்ட னிட்டுக்கிடந்தார். நம்பியும் சில நிமிடங்கள் அவரை எழுந்திருக் கச் சொல்லாமலே இருந்தார். அப்போது எம்பெருமானாருடைய சீடர்களில் ஒருவரான கிடாம்பியாச்சான் கோபம்கொண்டு, "இது என்ன சிஷ்யாசார்ய க்ரமம்? கருமுகை மாலையை வெயிலிலே போடுவார்களோ" என்று எம்பெருமானாரைப் பரிவு டன் தூக்கியெடுத்தார். உடனே நம்பியும், 'உம்மையன்றோ தேடினோம். இந்தத் திருமேனியில் பரிவுடையவர் நீரே. இன்று முதல் இவர் உஞ்சவ்ருத்திக்குச் செல்ல வேண்டாம். நீரே ஏகமாதுகரமாகத் தளிகைபண்ணி ப்ரஸாதிப்பீர்" என்று நியமித்திருளினர். கிடாம்பியாச்சானும் அவ்வண்ணமே எம்பெரு மானாருக்கு மடைப்பள்ளிக் கைங்கர்யத்தைச் செய்துகொண்டு வந்தார். கிடாம்பியாச்சான் வம்சத்தில் வந்த கிடாம்பி அப்புள் ளாரை ஆசார்யராகக் கொண்ட ஸ்ரீவேதாந்ததேசிகர் "யதிவரனார் மடைப்பள்ளி வந்த மணம்" என்று இதைக் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். இவ்வரலாற்றிலிருந்து எம்பெருமானாருடைய திரு மேனியில் மிக்க பரிவுடையவர் திருக்கோட்டியூர் நம்பி என் பதும், அத்திருமேனியில் பரிவுடையவர்களைத் தேர்ந்தெடுப்ப திலும் வல்லவர் என்பதும் விளங்குகிறது.

திருக்கோட்டியூர் நம்பி தாம் ரஹஸ்யார்த்தங்களை உபதேசித் ததோடு நில்லாமல் தம்முடைய ஸஹமாணாக்கரும் ஆளவந்தாரி டம் திருவாய்மொழியின் அர்த்தங்களைக் கேட்டவரும், திருமாலி ருஞ்சோலை அழகருக்குப் புரோஹிதரும், பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ ப்ராம்மணகுல திலகருமான திருமாலையாண்டானைக் கொண்டு எம்பெருமானார் திருவாய்மொழியின் அர்த்தங்களைக் கேட்கும்படி செய்தார். ஸ்ரீரங்கத்தில் அந்தத் திருவாய்மொழி காலக்ஷேபம் நடந்து வரும்போது இடையிடையே ஆளவந்தார் ஸாதித்த தாகச் சில அர்த்தங்களைச் சொல்லுவார் திருமாலையாண்டான். அவற்றில் சில இடங்களில், "இதைவிட இப்படி அர்த்தம் சொல் லுவது நன்றாயிருக்குமே" என்று எம்பெருமானார் கூறி வந்தார். அடிக்கடி இப்படி புது அர்த்தங்களை எம்பெருமானார் சொல்லும் வழக்கம் தொடர்ந்தது. அதனால் எரிச்சலுற்ற திருமாலையாண்

டான் அந்தப் புது அர்த்தங்களுக்கு "விச்வாமித்ர ஸ்ருஷ்டி" என்று பெயர் வைத்தார். இவ்வாறு வ்யாக்யானம் நடைபெறும் போது.

"அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து
அறியாமாமாயத்து அடியேனை வைத்தாயால்
அறியாமைக் குறளாய் நிலம் மாவலி மூவடியென்று
அறியாமை வஞ்சித்தாய் எனதாவியுள் கலந்தே"

[திருவாய் 2-3-3]

என்னும் பாட்டுக்கு அர்த்தம் கூறுகையில். "அறியா மாமாயத்து அடியேனை வைத்தாயால்" என்ற அடிக்கு, 'பலவித மயக்கங்களை விளைக்கும் இந்த ஸம்ஸாரத்தில் அடியேனை வைத்து விட்டாயே" என்று வருத்தம் தோற்ற ஆழ்வார் அருளிச் செய்வதாக ஆளவந்தார் நிர்வஹிப்பர்- என்று திருமாலையாண்டான் அருளிச்செய்தார். இப்படி அருளிச்செய்தவுடன் திருமுக மண்டலத்தில் அதிருப்தி தோற்ற இருந்தார் எம்பெருமானார். உடனே "இங்கும் ஏதேனும் விச்வாமித்ர ஸ்ருஷ்டி உண்டோ?" என்று அவரைக் கேட்டார் திருமாலையாண்டான். "உண்டு. நியமித்தால் சொல்லுகிறேன்" என்றார் எம்பெருமானார். 'சொல்லும்' என்று நியமித்தார் திருமாலையாண்டான். அதைக்கேட்ட எம்பெருமானார் "இத்திருவாய்மொழியில் முதல்பாட்டில் ஆழ்வார் தாமும் எம்பெருமானும் தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதும்போலே கலந்தோம் என்று கூறுகிறார். இரண்டாம்பாட்டில் 'என்னைப்பெற்ற தாயாய்த் தந்தையாய் அறியாதன அறிவித்த எம்பெருமானே! நீ எனக்குச் செய்த உபகாரங்களை அடியேனால் அளவிட முடியவில்லை' என்கிறார். இந்த மூன்றும் பாட்டுக்கு அடுத்ததான நாலாம்பாட்டில், 'எனதாவியுள் கலந்த பெரு நல்லுதவிக் கைம்மாறு எனதாவி தந்தொழிந்தேன்' என்று எம்பெருமான் செய்த இவ்வுதவிகளுக்குக் கைம்மாறாக ஆத்மஸமர்ப்பணம் செய்கிறார். இப்படி முன்பின் பாட்டுக்களில் ஆனந்தமாகப் பரிமாற்றம் நடந்து கொண்டிருக்கையில் மூன்றாம்பாட்டில் வருத்தப்படுவதாகப் பொருள் சொல்லுவது சரியல்ல. அதனால் 'அறியா மாமாயத்து அடியேனை அன்பு செய்வித்து வைத்தாயால்' என்று கூட்டி ஆழ்வார் ஆனந்தப்படுவதாகவே பொருள்கொள்ள வேண்டும்" என்று அருளிச்செய்தார். இதைக் கேட்டவுடன் திருமாலையாண்டானுக்கு "ஆளவந்தார் அருளிச்செய்த அர்த்தத்தைத் தவறு என்று சொல்லிவிட்டாரே" என்று மிகவும் சீற்றமுண்டாயிற்று. அதனால் அன்றிலிருந்து எம்பெருமானாருக்குத் திருவாய்மொழிக்கு அர்த்தங்கள் சொல்லுவதை நிறுத்திவிட்டார்.

இதைக் கேள்விப்பட்ட திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளி, திருமாலையாண்டானிடம் காலக்ஷேபம் நின்றதின் காரணத்தை அறிந்து, எம்பெருமானார் ஸாதித்த அர்த்தத்தை ஆளவந்தார் தாம் காலக்ஷேபம் கேட்டபோது அருளிச்செய்தார் என்று கூறி, "நீர் இவருக்குத் தெரியாத அர்த்தங்களைச் சொல்லுவதாக நினைக்காமல் காலக்ஷேபம் ஸாதிப்பீராக. இவருக்கு ஆளவந்தாருக்குத் தோற்றின அர்த்தம் தவிர வேறு அர்த்தம் தோற்றாது. ஸாந்தீபனியிடம் கண்ணன் வேதாத்யயனம் செய்தது போலே உம்மிடம் திருவாய்மொழி காலக்ஷேபம் கேட்கிறார் என்று கொள்ளும்" என்று அருளிச்செய்து விட்ட இடத்திலிருந்து உடையவர் மடத்திலே திருக்கோட்டியூர் நம்பியும் திருமாலையாண்டானும், பெரிய நம்பியும் கூட எழுந்தருளியிருந்து திருவாய்மொழிக் காலக்ஷேபத்தைத் தொடரச்செய்தார். அப்போது "பொலிக பொலிக" என்னும் பாசுரம் வந்தவுடன் "கலியும் கெடும்" என்றவிடத்திலே நம்பியும் உடையவரை ஏறவும் இறங்கவும் பார்த்தார் என்றும், உடையவர் அத்தைத் கண்டருளி, "இதற்குப் பொருள் ஏது" என்று கேட்க, "தேவரீர் திருவவதரித்து இதினுடைய அர்த்தத்தை வெளியிட்டுக் கொண்டு எழுந்தருளியிருக்கச் செய்தே கேட்க வேணுமோ? ப்ரபன்ன குலோத்தாரகரான தேவரீரே இதற்குப் பொருள்; அஸ்மதாதி$_3$களைக் கரையேற்றுகைக்காகவன்றோ நித்யவிபூ$_1$தியில் நின்றும் இங்கே எழுந்தருளிற்று" என்று அருளிச்செய்தார் என்றும், இதைக் கேட்டிருந்த திருமாலையாண்டான் மயிர்க்கூச்செறியப் பெற்றவராய் "இனி நான் ஆளவந்தாரை அறியேன்; எல்லாப் பேறும் தேவரீரே; தேவரீரோடு உண்டான ஸம்ப$_3$ந்த$_4$மே அடியேனுடைய பேற்றுக்கு ஸாத$_4$னம்" என்று அருளிச்செய்தார் என்றும் நாயனாராச்சான்பிள்ளையருளிய சரமோபாய நிர்ணயத்தில் காணப்படுகிறது.

திருக்கோட்டியூர் நம்பியினுடைய திருக்குமாரருக்குப் பெயர் தெற்காழ்வான் என்பது. நம்பிக்குத் தேவகிப் பிராட்டி என்னும் சிறந்த ஜ்ஞானமுடைய பெண்பிள்ளையும் இருந்தாள். அவ்விருவரையும் உத்தாரகரான எம்பெருமானார் திருவடிகளிலே ஆச்ரயிக்கும்படி செய்தார் திருக்கோட்டியூர் நம்பி. இந்த தேவகிப் பிராட்டியைப்பற்றி வார்த்தமாலை 206-ம் வார்த்தையில் பின்வரும் ஐதிஹ்யம் காணப்படுகிறது:- "உந்து மதகளிற்றன்" என்கிற பாட்டை அநுஸந்தித்துக்கொண்டு திருக்கோட்டியூர் நம்பி திருவாசலிலே (*சீரார் வளையொலிப்ப வந்து திறவாய்*) என்கிறவிடத்தை அநுஸந்திக்கிறபோது நம்பி திருமகளார் திருக்கதவைத் திறந்து

கொண்டு புறப்பட, எம்பெருமானார் விழுந்து தண்டனிட்டுக் கிடக்க, நெரித்துக்கொண்டு உள்ளேயோடிப்புக, நம்பி 'இது வென் பெண்ணே?' என்ன, "என்னை எம்பெருமானார் தண்டனிட்டார்" என்ன, 'அதுக்கு பயப்படவேணுமோ?' என்று அருளிச்செய்து, எம்பெருமானார் உள்ளே புக்கருளினவாறே, "இளையாழ்வீர்! இப்போது அநுஸந்தானம் உந்து மதகளிற்றன்றோ?" என்றருளிச் செய்தாரென்று பிள்ளையருளிச் செய்வர்— என்பது. வடிவழகிய நம்பிதாஸர் என்பவர் மிக அழகிய பாட்டுக்களாலே ஆழ்வார்கள் வைபவத்தையும், எம்பெருமானார் வைபவத்தையும் பாடியுள்ளார். அவரும் இந்த ஐதிஹ்யம் திருக்கோட்டியூர் நம்பி திருமாளிகையிலே நடைபெற்றதாகவே பாடியிருக்கிறார். இப்படியிருக்க பிற்காலத்தில் எழுதப்பட்ட திருப்பாவை அரும்பதவுரைகளில் 'உந்துமத களிற்றன்' பாட்டின் விஷயமான இந்த ஐதிஹ்யம் பெரிய நம்பியின் குமாரத்தியான அத்துழாய் விஷயமாக நடந்ததாகக் குறிப்பிட்டிருப்பது ஏற்கத்தக்கதல்ல.

இனி, பூர்வாசார்யர்கள் அருளிய வார்த்தாமாலை திவ்யப்ரபந்த வ்யாக்யானங்கள் முதலியவற்றில் உள்ள திருக்கோட்டியூர் நம்பி பற்றிய சில ஐதிஹ்யங்களைக் காண்போம் :—

வார்த்தாமாலை 83—விவரணம்:— புலியும் சிங்கமும் போலே, எம்பெருமான் உபாயமாம்போது தன்னோடொத்த மற்றொரு உபாயத்தைப் பொறுக்கமாட்டான். யானைக் கூட்டத்திலுள்ள எல்லா யானைகளோடு சேர்ந்து தலைமையானை போகங்களை அநுபவிப்பது போலே எம்பெருமான் உபேயமாகும்போது பிராட்டிமார் நித்ய முக்தர்கள் முதலானவர்களோடு சேர்ந்தே உபேயமாகிறான். அதாவது—அன்றே முக்தியடைபவனை இவர்கள் அனைவரோடு கூடி எம்பெருமான் அநுபவிக்கிறான் என்று கருத்து. [திருக்கோட்டியூர் நம்பியருளிச் செய்த வார்த்தை]

வார்த்தாமாலை 196 விவரணம் :— "கைக்குழந்தைக்குத் தாய்முலைபோன்றது இருப்பது நமக்கு த்வயம்" என்று திருக்கோட்டியூர் நம்பி அருளிச்செய்வர்.

வார்த்தாமாலை 199—விவரணம்:—திருக்கோட்டியூர் நம்பியை, அவருடைய தமையனார் அந்திம தசையிலே 'எனக்குத் தஞ்சமேது?" என்று கேட்க; 'விரஜைக்கு இக்கரையில் 'உம்மை எங்கு நின்றும் வந்தீர்?' என்று கேட்டாருண்டாகில், 'திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீபாதத்தில் நின்றும் வந்தோம்' என்றும், [இந்த ஸம்ஸார மண்டலத்தில் திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீபாதத்

தை அடைந்தவன் என்று சொன்னால் யமன் முதலானோர் நலிய மாட்டார்கள் என்று கருத்து] அக்கரையில் உம்மைக் கேட்டா ருண்டாகில், 'திருக்கோட்டியூர் நம்பி தமையனார்' என்றும் சொல்லுமென்று அருளிச்செய்தார். [நித்ய விபூதியில் நம்பிக்குத் தமையனார் என்று சொன்னால் "லோகோத்தாரகரான எம்பெருமா னாருடைய ஆசார்யர்க்கும் தமையனாரா?" என்று அங்குள்ளார் கொண்டாடுவர் என்று கருத்து]

நாச்சியார் திருமொழி 11-5—ஆளவந்தார் மகனார் சொட்டை நம்பி ஓரளவிலே திருக்கோட்டியூர் நம்பியை நெகிழ ஒரு வார்த்தை சொன்னாராய். 'நீ கடக்க வர்த்தி' [நீ வெளியில் போ] என்று ஆளவந்தார் அருளிச்செய்தாராம்.

பகவத் விஷயம் 8-8-2—விவரணம் :— எம்பெருமானார் சிஷ் யர்களுக்குக் காலக்ஷேபம் ஸாதித்து வரும்போது ஜீவாத்மாவுக்கு ஞானம் முக்கியமான லக்ஷணமா? பகவச் சேஷத்வம் (எம்பெரு மானுக்கு அடிமைப்பட்டிருப்பது) முக்யமான லக்ஷணமா? என்னும் கேள்வி எழுந்தது. இதைத் திருக்கோட்டியூர் நம்பியிடம் சென்று கேட்டு நிர்ணயம் செய்து வரும்படி கூரத்தாழ்வானை அனுப்பினர். கூரத்தாழ்வானும் நம்பி திருமாளிகையில் ஆறு மாதம் ஸேவித்து நின்று விடைபெறும்போது, "ஆழ்வான்! 'அடியேனுள்ளான். உடலுள்ளான்' [திருவாய் 8 8-2] என்னும் பாட்டில் உடலுக்கு எதிர்த்தட்டான ஆத்மாவைக் குறித்துச் சொல்லும்போது 'என் னுள்ளான்' என்று ஞானத்தையிட்டுச் சொல்லாதே 'அடியே னுள்ளான்' என்று ஶேஷத்வத்தையிட்டு ஆத்மாவை நிரூபித்த படியைக் கண்டாயோ. (ஆகையால் ஞானத்தைவிட ஶேஷத் வமே முக்கியம்)" என்று சொல்லியனுப்பினார்.

தனிசரமத்தில் ஐதிஹ்யம் : ஸ்வாதந்த்ரியத்தை உள்ளடக் கிய மற்ற உபாயங்களை அனுஷ்டிப்பதில் ஜீவாத்மாவுக்குத் தகுதி யில்லை என்று உணர்ந்த அதிகாரிகளுக்கே சரம ஶ்லோகத்தின் பொருளைச் சொல்லவேண்டும் என்னும் அர்த்தத்தை அருளிச் செய்துவிட்டு, "இவ்வளவு பிறவாதவனுக்கு இவ்வர்த்தம் சொல்லு கையாகிறது பறிப்பான் (வழிபறிப்பவன்) கையில் சிற்றறிவாள் கொடுக்குமோபாதி" என்று திருக்கோட்டியூர் நம்பி அருளிச் செய்வர். திருக்கோட்டியூர் நம்பி 105 திருநக்ஷத்ரங்கள் எழுந் தருளியிருந்ததாகப் பெரிய திருமுடியடைவு கூறுகிறது.

திருக்கோட்டியூர் நம்பி ஸாதித்த மற்றும் பல அர்த்தங்கள் நம்முடைய ஆசார்ய வைபவ மஞ்ஜரி முதல்பாகத்தில் காணலாம்.

❋ ❋ ❋

[illegible]றொன்றில்இதமுரைத்தான் வாழியே

[illegible] [illegible]ங்காரிகையுடையோன் வாழியே

[illegible] வாழியே

[illegible]ம்பேரியம்புமவன் வாழியே

[illegible] வாழியே

[illegible] வாழியே

[illegible]நன்குரைத்[illegible] வாழியே

நங்கள் திருக்கோட்டிநம்பி நற்பதங்கள் வாழியே

அல்பகலும் ஆளவந்தார் அடிநினைவோன் வாழியே

அனவரதம் தெற்காழ்வார்க்காட்செய்வோன் வாழியே

வெல்பொருள் வெளியிட, எதியை வெறுத்துகந்தான் வாழியே

மேதினியோருய்வரென்று மெச்சினான் வாழியே

உள்மந்திரமெதிராசர்க்கொளித்துரைத்தான் வாழியே

[illegible]நெறியைஉகந்தணைத்தான் வாழியே

* [illegible] வாழியே

[illegible] வாழியே

* [illegible] பெரியாழ்வார் காலத்தில் அவருக்குப் பரமாப்தராய், [illegible]ம் பாண்டிய அரசனுக்கு மந்திரியாய் இருந்த [illegible]ல் உதித்தவர் திருக்கோட்டியூர் நம்பி என [illegible]

ஸ்ரீ:

திருநாங்கூர் மணிமாடக்கோயில்

ஸ்ரீநாராயணப்பெருமாள் சந்நிதியில்

எழுந்தருளியிருக்கும்

திருக்கோட்டியூர் நம்பிகள்



ஸ்ரீவல்லப பதாம்போஜ தீபக்த்யம்ருதஸாகரம் ।

ஸ்ரீமத்கோஷ்டபுரீபூர்ணம் தேசிகேந்த்ரம் பஜாமஹே ॥

(ஶ்ரிய:பதியின் திருவடித்தாமரையில் ஞானமும், பக்தியுமாகிற அமுதங்களுக்குக் கடல்போன்றவரும், திருக்கோட்டியூர் நம்பியென்னும் பெயருடையவருமான ஆசார்யோத்தமரை ஆச்ரயிக்கிறோம்)